**செய்தி வெளியீடு எண் : 28** **நாள் : 28.05.2024**

**<u>மாண்புமிகு ஆளுநர் மற்றும் வேந்தர் அவர்கள், உதகமண்டலத்தில் உள்ள ஆளுநர் மாளிகையில் இன்று (28.05.2024) நடைபெற்ற தமிழ்நாடு உள்ள மாநில பல்கலைக்கழகங்கள், மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களின் இரண்டு நாள் மாநாட்டின் நிறைவு அமர்வுக்குத் தலைமை தாங்கினார்.</u>**

மாண்புமிகு ஆளுநர் மற்றும் வேந்தர் அவர்கள், உதகமண்டலத்தில் உள்ள ஆளுநர் மாளிகையில் இன்று (28.05.2024) நடைபெற்ற தமிழ்நாடு மாநில பல்கலைக்கழகங்கள், மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களின் இரண்டு நாள் மாநாட்டின் நிறைவு அமர்வுக்குத் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு ஆளுநர் - தமிழ்நாடு மாநில பல்கலைக்கழகங்களின் வேந்தர் திரு. ஆர்.என். ரவி அவர்கள், உதகமண்டலத்தில் உள்ள ஆளுநர் மாளிகையில் இன்று (28.05.2024) தமிழ்நாடு மாநில மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் - 2024 இரண்டு நாள் மாநாட்டின் நிறைவு விழா அமர்வுக்கு தலைமை வகித்தார்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தனது நிறைவுரையில், மாநாட்டில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றி தெரிவித்ததோடு, மாநிலத்தில் உயர் கல்விக்கான கூட்டுச் சூழல் அமைப்பை உருவாக்குவதற்கு மாநாடு மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக மகிழ்ச்சி தெரிவித்தார். இந்த மாநாட்டில் இருந்து கொண்டு செல்லப்படும் தகவல்கள், சிறந்த கல்விச் சூழலை உருவாக்க உதவும் என்று அவர் நம்பிக்கையுடன் கூறினார்.

மாணவர்களுடனான தனது எண்ணற்ற கலந்துரையாடல்களையும் நமது மனித வளங்கள் நாட்டிலேயே சிறந்தவை என்பதையும் அவர்கள் எவ்வாறு சிறப்பாக நிரூபித்தார்கள் என்பதையும் ஆளுநர் நினைவுகூர்ந்தார். “சரியான வழிகாட்டுதல், உந்துதல் ஆகியவை கிடைக்கப்பெற்றால், நமது மாணவர்கள் அதிசயங்களை நிகழ்த்த வல்லவர்கள். இருப்பினும், எனினும், அவை போதுமான வகையில் கிடைக்காததால், அவர்களால் தங்கள் திறனையும் விருப்பங்களையும் நிறைவேற்ற முடியவில்லை.

நாட்டில் தங்களுக்குள்ள ஏராளமான வாய்ப்புகளைப் பற்றி நம் மாணவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். அவர்களுக்கு வழிகாட்டுதல் தேவை. திறமையான மாணவர்களான நமது முனைவர் பட்டம் பெற்றவர்கள் கூட எந்த ஒரு ஆய்வு உதவித்தொகையின்றியும் அல்லது மாதத்துக்கு சுமார் ₹5000 என்ற சொற்பத் தொகையைப் பெறுவதும் கவலைக்குரிய விஷயம். போதுமான வழிகாட்டுதல் மற்றும் உந்துதல் இல்லாததால், பல்கலைக்கழக மானியக்குழு (யுஜிசி) நடத்தும் என்இடி - ஜேஆர்எஃப் ஃபெலோஷிப் மூலம் அவர்களால் மாதத்துக்கு சுமார் ₹40-45 ஆயிரம் பெற முடியவில்லை. இத்தொகை கௌரவ விரிவுரையாளர்கள் வாங்கும் ஊதியத்தை விட கிட்டத்தட்ட இரட்டிப்பானதாகும், நமது மாநிலத்தில் உள்ள சில தனியார் பல்கலைக்கழகங்கள் இந்த விஷயத்தில் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மாநில பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் இந்தப் பிரச்சினையை தீவிரமாகக் கவனத்தில் கொண்டு, இதுபோன்ற தனியார் பல்கலைக்கழகங்களுடன் ஒத்துழைக்க வேண்டும்," என ஆளுநர் வலியுறுத்தினார்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள், நமது பல்கலைக்கழகங்களில் நிலவும் கடுமையான ஆசிரியர்கள் பற்றாக்குறை, கிட்டத்தட்ட 40-50% பற்றாக்குறையாக இருப்பது, நமது மாணவர்களின் எதிர்காலத்தை எவ்வாறு பெரிதும் சமரசம் செய்துள்ளது என்பதை எடுத்துரைத்தார்.

பாடத்திட்டம் குறித்து ஆலோசனை செய்த ஆளுநர், பி.ஏ., எம்.ஏ., வரலாறு மற்றும் அரசியல் அறிவியல் பாடத்திட்டங்களில் நிலவும் ஏற்றுக்கொள்ள முடியாத சிதைவுகள் குறித்து கவலை தெரிவித்தார். மாநில பல்கலைக்கழகங்களின் படிப்புகள். பாடத்திட்டத்தில் தேசிய சுதந்திர இயக்கம் மொத்தமாக இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தேசிய சுதந்திர இயக்கத்தில் தமிழ்நாட்டு மக்கள் முக்கிய பங்கு வகித்தனர் என்று நமது தேச விடுதலைக்காக தமிழ்நாட்டைச் சேர்ந்த பல ஆயிரம் சுதந்திர போராட்ட வீரர்கள் தங்களின் இன்னுயிரை தியாகம் செய்ததை அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

“தமிழ்நாட்டைச் சேர்ந்த பல்லாயிரம் இளைஞர்கள் நேதாஜியின் இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்து ஆங்கிலேயர்களுடன் போரிட்டனர். பலர் தங்கள் இன்னுயிரை ஈந்தனர். தேவகோட்டை, பெருங்காமநல்லூரில் சுதந்திர போராட்ட வீரர்கள் படுகொலை செய்யப்பட்டதை மறக்க முடியாது. பாளையங்கோட்டையில் பாளையக்காரர்களின் எதிர்ப்பு மற்றும் மக்கள் எழுச்சிகள் மற்றும் அவற்றில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் ஆங்கிலேயர்களால் கொல்லப்பட்டனர்,” என்று ஆளுநர் குறிப்பிட்டு அதில் ஒரு சில நிகழ்வுகளை மேற்கோள்காட்டினார்.

மகாத்மா காந்தி 16 முறைக்கு மேல் தமிழ்நாட்டுக்கு வந்துள்ளார். அவர் முன்னெடுத்த சுதேசி இயக்கம், உப்பு சத்தியாகிரகம் போன்றவை தமிழ்நாட்டில் பெரும் வரவேற்பைப் பெற்றன, மேலும், தமிழ்நாட்டு மக்கள் அவற்றில் முக்கிய பங்கு வகித்தனர். ஆங்கிலேயர்கள் வங்காளத்தை வகுப்பு ரீதியாகப் பிரித்தபோது, தமிழ்நாட்டில் ஒரு பெரிய எழுச்சி ஏற்பட்டது, அதுவே சிறந்த சுதந்திர போராட்ட வீரரான வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களை தேசிய சுதந்திர இயக்கத்தில் சேரத் தூண்டியது. பஞ்சாபில் நடந்த ஜாலியன் வாலா பாக் படுகொலை தமிழ்நாட்டு மக்களை ஆத்திரமடையச் செய்ததுடன் இளம் காமராஜர் தனது படிப்பை கைவிட்டு தேசிய சுதந்திர இயக்கத்தில் ஈடுபடத் தூண்டியது. சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்பை உருவாக்குவதில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகித்தது. ஆனால், அவற்றை விளக்க ஒரு சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே உள்ளன.

தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்பில், பிரிட்டிஷ் ஆட்சியின் தாக்கம், நமது பாடத்திட்டத்தில் இருந்து முற்றிலும் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது. மாறாக திராவிட இயக்கக் கதைகளால் அப்பாடத்திட்டம் நிரம்பியுள்ளது. சமூக மற்றும் அரசியல் விழிப்புணர்வைப் பொறுத்தமட்டில், அய்யா வைகுண்டரின் அய்யாவழி இயக்கம், வள்ளலாரின் சன்மார்க்க இயக்கம், தலித் தலைவர் சுவாமி சகஜானந்தா தலைமையிலான நந்தனார் இயக்கம் என அனைத்து இயக்கங்கள் அவற்றில் தவறவிடப்பட்டுள்ளன.

19-ஆம் நூற்றாண்டில், பல லட்சம் தமிழ் மக்கள் ஆங்கிலேயர்களால் ஒப்பந்தத் தொழிலாளர்களாக மலேசியா, இலங்கை, ஃபிஜி ஆகிய நாடுகளில் உள்ள அவர்களது காலனிகளுக்கு வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டனர், அங்கு அவர்கள் பிரிட்டிஷ் நிலப்பிரபுக்களின் அடிமைகளைப் போல ஏலம் விடப்பட்டனர். விலங்குகளைப் போல நடத்தப்பட்டனர். எதிர்த்தவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர், சித்திரவதை செய்யப்பட்டனர், கொல்லப்பட்டனர்.

இந்திய விடுதலைக்காக லட்சக்கணக்கான தமிழ் மக்களின் துயரங்களையும், தியாகங்களையும், ஆங்கிலேயர்களால் எண்ணற்ற மக்கள் பட்ட துன்பங்களையும் அழிப்பதென்பது, நமது எண்ணற்ற தியாகிகளை அவமதிப்பது மட்டுமின்றி, நமது முன்னோர்களின் உண்மையான வரலாற்றையும் தியாகத்தையும் மறுப்பதுமாகும். இது நமது இளைஞர்களிடையே தேசிய உணர்வை பலவீனப்படுத்தும். மேலும் இளைஞர்களை தேசிய நீரோட்டத்தில் இருந்து உணர்வுபூர்வமாக துண்டிக்கும் சூழல் அமைப்பை வளர்க்கிறது என்று ஆளுநர் கூறினார்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள், ஜெனரேட்டிவ் ஏஐ, குவாண்டம் கம்ப்யூட்டிங், அட்வான்ஸ்ட் ரோபோட்டிக்ஸ், அல்ட்ரா நானோ தொழில்நுட்பம் மற்றும் சின்தெட்டிக் பயாலஜி போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இவை உலகம் மற்றும் உலக ஒழுங்கில் உள்ள அவற்றின் ஆழமான தாக்கத்தை எடுத்துக்காட்டுகின்றன. இந்த மாறி வரும் தொழில்நுட்பங்களின் உண்மையான திறனைப் பயன்படுத்திக்கொள்ள நமது இளைஞர்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ள ஏதுவாக இந்த தொழில்நுட்பங்களில் முதலீடு செய்யவும் அதற்கு வசதியாக நமது இளைஞர்களை தயார்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்,

முன்னதாக, அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கவுன்சிலின் உலகளாவிய மனித மதிப்புகளுக்கான தேசிய குழுவின் தலைவர் திரு. எச்.டி.சரண் அவர்கள், உலகளாவிய மனித மதிப்புகள் பற்றிய விரிவான விளக்கத்தை அளித்தார், மனித கல்வியில் அவற்றின் பங்கு மற்றும் மனிதநேய சமூகத்தின்

வாழ்க்கை மாதிரிகளாக இங்குள்ள அமைப்புகள் எப்படி உருவாகலாம் என்பதை அவர் வலியுறுத்திப் பேசினார்.

இந்த அமைப்புகள் தங்கள் சமூகங்களுக்கான ஆதார மையங்களாக எவ்வாறு செயல்பட முடியும் என்பதையும், இயற்கையான மற்றும் பரிணாம வளர்ச்சியில் தனிப்பட்ட மற்றும் சமூக மாற்றம் எவ்வாறு நிகழலாம் என்பதையும் அவர் எடுத்துரைத்தார்.

ஆரோவில் அறக்கட்டளையின் செயலாளரான டாக்டர். ஜெயந்தி ரவி அவர்கள், தேசிய கல்விக் கொள்கை-2020 உடன் இணைந்து பல்வேறு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உள்ள மாணவர்களுக்கான உற்சாகமான வாய்ப்புகள் குறித்து துணை வேந்தர்களுடன் ஆழமான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்த வாய்ப்புகள் ஆரோவில்லில் தன்னார்வ தொண்டில் தொடங்கி பயிற்சி பெறுவது முதல் ஆசிரியர்களுடன் கூட்டு ஆராய்ச்சித் திட்டங்களில் ஈடுபடுவது வரை நீண்டுள்ளது. ஆரோவில், பெரும்பாலும் விடியலின் நகரம் என்று அழைக்கப்படுகிறது. அது ஸ்ரீ அரவிந்தரின் பார்வையில் வேரூன்றி உள்ளது, இது விழிநிலை நனவுடன் ஒரு துடிப்பான சுற்றுச்சூழல் அமைப்பை வழங்குகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்திய செஞ்சிலுவைச் சங்க (ஐ.ஆர்.சி.எஸ்) தமிழ்நாடு கிளையின் நிர்வாகிகள் குழு உறுப்பினரான திரு. கார்த்திக் திருநாராயண் அவர்கள், ஐ.ஆர்.சி.எஸ்., இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் முக்கிய பங்கை வலியுறுத்தியும் ஐ.ஆர்.சி.எஸ் ஆற்றி வரும் விலைமதிப்பற்ற சேவைகளையும் விளக்கினார். விரிவான ஈடுபாட்டுக்காக ஒரு ஒற்றைத் தொடர்பு புள்ளியை (SPOC) நியமிக்குமாறு துணை வேந்தர்களை அவர் வலியுறுத்தினார். மேலும், சமூகப் பொறுப்புணர்வு கலாசாரத்தை வளர்ப்பதற்கு கல்லூரி இளைஞர்களின் அதிகபட்ச பங்கேற்பின் முக்கியத்துவத்தையும் அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

இந்நிகழ்ச்சியில், துணை வேந்தர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்களை ஆளுநர் அவர்கள் வழங்கினார். என்இடி - யுஜிசி - சிஜஎஸ்ஆர் தேர்வுகளில் தகுதி பெற்று ஜூனியர் ஆய்வு உதவித்தொகை பெற்ற மாணவர்கள் மற்றும் அறிஞர்கள் தாங்கள் தயாரான அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

இந்த இரண்டு நாள் மாநாட்டில் திரு. ஆர். கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., ஆளுநரின் செயலாளர், மத்திய மற்றும் மாநில பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள், கல்வி நிறுவனங்களின் தலைவர்கள், பேராசிரியர்கள், மாநில பல்கலைக்கழகங்களின் ஆய்வறிஞர்கள், மாணவர்கள், ஆளுநர் மாளிகை அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

---

ஆளுநர் மாளிகை, சென்னை-22 — வெளியீடு:-
நாள்: 28.05.2024 — மக்கள் தொடர்பு அலுவலகம்